# இலங்கை அரசாட்சி "கெசெற்" பத்திரிகை.

அரசாட்சியாரின் அனுமதிப்படி பிரசுரிக்கப்பட்டது.

இல. 8,556 — 1939 ம் ஞூ மார்கழிமீ 8 ந் திகதி, வெள்ளிக்கிழமை.

## Part IV.—நான்காம் பாகம்.

---

### அரசாட்சியாரின் விளம்பரம்.

L. D.—B. 1/37

**கிராமச் சங்கச் சட்டம்.**

கிராமச் சங்கச் சட்டத்தின் (அதி. 198) 124 ம் பிரிவின்படி தேசாதிபதியவர்கள் மீது வைக்கப்பட்ட தத்துவத்தின்படி உத்தம அரசாங்க பரிபாலன உத்தியோகத்தரால் செய்யப்பட்ட பிரமாணம்.

உத்தம தேசாதிபதியவர்கள் கட்டளைப்படி,

கொழும்பு, 1939 ம் ஞூ நவம்பர்மீ 30 ந் உ.

ஜே. சீ. ஹோவார்ட்,
சட்டக் காரியதரிசி.

**பிரமாணம்.**

1927 ம் ஞூ (பெப்ருவரி) மாசிமீ 18 ந் திகதியைக்கொண்ட 7,568 ம் இலக்க கெசற் பத்திரிகையில் பிரசித்தஞ்செய்யப்பட்டு 1938 ம் ஞூ (நவம்பர்) கார்த்திகைமீ 18 ந் திகதியைக்கொண்ட 8,413 ம் இலக்கக் கெசற் பத்திரிகையில் பிரசித்தஞ்செய்யப்பட்ட பிரமாணத்தால் கடைசியாகத் திருத்தப்பட்ட கிராமக் கோடுகளுக்கும் கிராமச் சங்கங்களுக்குமுரிய கிறிமினல் வியவகார ஒழுங்குச் சட்ட ஒழுக்கவிதிகள் இன்னும் கீழ்க்காணுமாறு திருத்தப்படுகின்றன :—

(1) 40 ம் பிரமாணத்துக்கு மேலடுத்து முன்னுள்ள தலையங்கத்தில் " பதிவு டாப்பும் தெண்டப் புத்தகமும் " என்னுஞ் சொற்களுக்குப் பதிலாக " பதிவு டாப்புக்கள் " என்னுஞ் சொல்லை வைத்துக்கொள்ளவேண்டும்.

(2) 40 ம் பிரமாணத்தில், " தெண்டப் புத்தகம் " என்னுஞ் சொற்களுக்குப் பதிலாக " தெண்டப் பதிவுடாப்பு " எனுஞ் சொற்களை வைத்துக்கொள்ள வேண்டும்.

(3) 41 ம் பிரமாணத்துக்குப் பதிலாக கீழ்க்காணும் புதிய பிரமாணத்தை வைத்துக்கொள்ள வேண்டும் :—

" 41. ஒவ்வொரு மாதத்துக்குமுள்ள தெண்டப் பதிவு டாப்பு, அதன் இணைப்பிரதியுடன் அவ்வம்மாதத்துக்கு அடுத்துள்ள மாதத்தின் 10 ம் நாளுக்குமுன்னர் அக்கிராசனரால் அல்லது நீதவானால் மாகாணத் தலைவருக்கு அனுப்பப்பட வேண்டும்.

(4) 41 ம் பிரமாணத்துக்கு நேர்பின் பின்வரும் புதிய 41A. ம் பிரமாணத்தைச் சேர்த்துக்கொள்ள வேண்டும்.

" 41A. நீதவானால் அல்லது அக்கிராசனரால் அறவிடப்பட்ட தெண்டத்தை மாகாணத் தலைவருக்கு அனுப்புதல் சம்பந்தமாக, அவர் தகுதியெனக் காணலாகும் அத்தகைய கட்டளைகளை நீதவானுக்கு அல்லது அக்கிராசனருக்கு இடலாம். மாகாணத் தலைவரிடமிருந்து மாறுபாடான எக்கட்டளைகளும் இல்லாதவிடத்து, கிராமக் கோடு அல்லது கிராமச் சங்கம் நடைபெறும் வியவகார காலத்தில் எவ்விடத்திலேனும் அறவிடப்பட்ட எல்லாத் தெண்டத் தொகைகளும் நீதவானால் அல்லது அக்கிராசனரால், காரியத்துக்கேற்ப, அவ்விடத்து வியவகார காலமுடிவில் அல்லது வியவகார காலம் ஒருவாரத்துக்கு மேலும் நீடிக்குமானால், ஒவ்வொரு வார முடிவிலும் மாகாணத் தலைவருக்கு அனுப்பப்பட வேண்டும்.

(5) I ம் அட்டவணையில் K. மாதிரிப் பத்திரத்திற்குப் பதிலாக கீழ்க்காணும் புதிய மாதிரிப் பத்திரத்தை வைத்துக்கொள்ள வேண்டும்.

19 ம் ஆண்டு மாதத்தில் விதித்துத் திரட்டிய தெண்டப்பணத் தொகையின் விவரணம்.

[கடந்த மாதத்திலுள்ள நிலுவைகள் சிவப்பு மையால் எழுதிச் சேர்க்கப்பட வேண்டும்.]

| 1 | 2 | 3 | 4 | 5 | | 6 | 7 | 8 | 9 | 10 | 11 |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| தெண்டம் விதித்த திகதி | வழக்கு இலக்கம் | கட்சியின் பெயர் | அபராதம் அல்லது குற்றம் | எந்தச் சட்டத்தின்படி குற்றவாளியாக்கத் தீர்க்கப்பட்டதென்பது | | விதித்த தெண்டத் தொகை | அறவிடப்பட்டு வரவோடு சேர்க்கப்பட்ட தொகை | கோட் சொல்வி ஊராக சௌக்கியாதாரசங்கம், சுகாதாரசங்கம் முதலியவற்றிற்குக் கொடுத்த தொகை. | 8 ம் பத்தியின்படி கொடுபட்டதற்குறிய உத்தரவு. | குறிப்புக்கள் எனும் பத்தியில் சொல்லிய நியாயங் காரணமாகமாக அறவிடப்படாத தொகை. | குறிப்புக்கள் |
| | | | | | | | | | | | |

## அரசாட்சியாரின் தேள்வைக்காகிய காணி விளம்பரங்கள்.

1876 ம் ஸ்ரீ-த்து 3 ம் இலக்கச் சட்டத்தினது 7 ம் பிரிவின் பிரகாரம் கிணியாயில் ஒரு மலசலங்கழிக்குமிடம் கட்டுவதற்கு என்னும் பகிரங்க தேவைககு வேண்டியதான பின்னர்ச் சொல்லப்படும் காணியை அஃதாவது :—

6 ம் கடைசி தொப்போ பிளானில் 5 ம் இன்செற்றின் முதலாம் அனுபந்தம். குறிச்சி—சின்னக்கிணியாய்.

| துண்டு. | காணியினது பெயர். | விபரம். | உரித்தாளியின் பெயர். | விசாலம். ஏ. றூ. ப. |
|---|---|---|---|---|
| 1926 | கட்டையத்துவளவு .. | கல்லினுற் கட்டப்பட்டு ஓட்டால் வேய்த மலசலங்கழிக்கு மிடத்தின் ஒரு பகுதி யடங்கிய தரிசுநிலம் (உறுதியான கட்டடம்) | சின்னக்கிணியாயிலிருக்கும் அப்துல் றகுமான் அனிசுலெவ்வை | 0 0 2·8 |

எடுத்துக்கொள்வதற்கான எத்தனஞ்செய்யும்படி (அதிகாரம் 203, வொல். 5 காணி எடுத்துக்கொள்வதைப்பற்றிய சட்டத்தினது 5 ம் பிரிவின் ஏற்பாடுகளின் பிரகாரம் தேசாதிபதியவர்களின் எண்ணப்படி சஞதிகார மந்திராலோசனைச்சபை எனக்குக் கற்பனைசெய்திருப்பதனுல் அக்காணியை ஆட்சி ஒப்புக்கொள்ள அரசாட்சியார் எண்ணியிருக்கிறுர் என்பதை 6 ம் பிரிவின்படி வேண்டிய பிரகாரம் நான் இதனைக்கொண்டு பிரசித்தமாய் விளம்பரஞ்செய்கிறேன்.

மேற்குறித்த காணிக்கு உரித்துப்பேசுகின்ற சகலரும் தாமாக அல்லது அவரவருடைய காரியகாரர்மூலமாய் 1940 ம் ஸ்ரீ (ஜெனவரி) தை மாசம் 10 ந் தேதியிலன்று காலை 9 மணிக்கு சின்னக்கிணியாய்த் துறைக்குக்கிட்ட இருக்கும் மடத்தில் என்முன்பாக வெளிப்பட்டுத் தத்தமக்கு அக்காணிகளிலுள்ள உடந்தைகளினது தன்மையையும் அவ்வுடந்தைகளுக்காய்த் தாம் சாதிக்கும் உரித்துகளின் தொகையையும் விவரங்களையும் சொல்லும்படி இதனுல் அவர்களிடத்திற் கேட்டுக்கொள்ளப்படுகின்றது.

திரிகோணமலைக் கச்சேரி,
1939 ம் ஸ்ரீ (டிசம்பர்) மார்கழிமீ 1 ந் உ.

சீ. ஜே. டேன் லர்ங்றி,
உதவி அரசாட்சி ஏசண்டு.

---

1876 ம் ஸ்ரீ-த்து 3 ம் இலக்கச் சட்டத்தினது 7 ம் பிரிவின் பிரகாரம் நமுனகுலவிலிருக்கும் வைத்திய உத்தியோகஸ்தருக்கு ஒரு வீடு கட்டுதல் என்னும் பகிரங்க தேவைக்கு வேண்டியதான பின்னர்ச் சொல்லப்படும் காணியை, அஃதாவது :—

கடைசிப்படத்து இல. 1, அட்டவணை 1. குறிச்சி—ருவலக்ம.

| துண்டு. | காணியினது பெயர். | விபரம். | உரித்தாளியின் பெயர். | விசாலம். ஏ. றூ. ப. |
|---|---|---|---|---|
| 792 | பின்ஹறுவ தோட்டம் .. | 30 வயதுள்ள 1520 தேயிலைச் செடிகளும், 3 கறுப்பந்தைல மரங்களும், 3 வயதுள்ள 2 கறுப்பந்தைல மரங்களும். | நமுனகுலவிலிருக்கும் செயின ஜெ. கேறி. | 0 2 2·7 |

எடுத்துக்கொள்வதற்கான எத்தனஞ்செய்யும்படி 1876 ம் ஸ்ரீ-த்துக் காணி எடுத்துக்கொள்வதைப்பற்றிய சட்டத்தினது 6 ம் பிரிவின் ஏற்பாடுகளின் பிரகாரம் தேசாதிபதியவர்கள் எனக்குக் கற்பனைசெய்திருப்பதனுல் அக்காணியை ஆட்சிஒப்புக்கொள்ள அரசாட்சியார் எண்ணியிருக்கிறுர் என்பதை 7 ம் பிரிவின்படி வேண்டிய பிரகாரம் நான் இதனைக்கொண்டு பிரசித்தமாய் விளம்பரஞ்செய்கிறேன்.

மேற்குறித்த காணிக்கு உரித்துப்பேசுகின்ற சகலரும் தாமாக அல்லது அவரவருடைய காரியகாரர்மூலமாய் 1940 ம் ஸ்ரீ (ஜெனவரி) தை மாசம் 16 ந் தேதியிலன்று முற்பகல் 9 மணிக்கு நமுனகுல சற்கீற் வங்கலாவில் என்முன்பாக வெளிப்பட்டுத் தத்தமக்கு அக்காணியிலுள்ள உடந்தைகளினது தன்மையையும் அவ்வுடந்தைகளுக்காய்த் தாம் சாதிக்கும் உரித்துகளின் தொகையையும் விவரங்களையும் சொல்லும்படி இதனுல் அவர்களிடத்திற் கேட்டுக்கொள்ளப்படுகின்றது.

வதுளைக் கச்சேரி,
1939 ம் ஸ்ரீ (டிசெம்பர்) மார்கழிமீ 4 ந் உ.

என். ஜே. லடிங்ரன்,
ஊவா அரசாட்சி ஏசண்டு.

PRINTED AT THE CEYLON GOVERNMENT PRESS, COLOMBO.